# அரையாண்டு பொதுத் தேர்வு 2022

**8** - ஆம் வகுப்பு **தமிழ்** பதிவு எண்: | | | | | | |

காலம் : 2.30 மணி மதிப்பெண்கள் : 100

**I. பொருத்தமான விடையை தேர்வு செய்து எழுதுக.:-** 20x1 = 20

1. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது...............
   அ) விளக்கு ஆ) கல்வி இ) விளையாட்டு ஈ) பாட்டு
2. வண்புகழ் மூவர் தன் பொழில் வரைப்பு என்று குறிப்பிடும் நூல்.............
   அ) தொல்காப்பியம் ஆ) அகநானூறு இ) புறநானூறு ஈ) சிலப்பதிகாரம்
3. கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு............
   அ) வீரம் ஆ) அச்சம் இ) நாணம் ஈ) மகிழ்ச்சி
4. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம்...........
   அ) திருச்சி ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோவை
5. இயற்கைப் போற்றுதல் தமிழர்.............
   அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு
6. 'செந்தமிழ்த்தேனி' என்ற புகழுரைக்குச் சொந்தக்காரர்...............
   அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) வாணிதாசன் ஈ) கண்ணதாசன்
7. இதழ்களைச் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள்...............
   அ) இ, ஈ ஆ) எ, ஏ இ) உ, ஊ ஈ) அ, ஆ
8. உடல்நலம் என்பது ...................... இல்லாமல் வாழ்தல் ஆகும்
   அ) அணி ஆ) பிணி இ) மணி ஈ) பணி
9. நெடுமை+தேர் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்..........
   அ) நெடுதேர் ஆ) நெடுத்தேர் இ) நெடுந்தேர் ஈ) நெடுமைதேர்
10. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது....................
    அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) பயனிலை ஈ) வேற்றுமை
11. 'கண்ணா வா' என்பது .................. தொடர்
    அ) எழுவாய் ஆ) விளி இ) வினைமுற்று ஈ) இடைச்சொல்
12. 'வருக' என்ற வினை முற்றுக்கு உரிய வேர்ச்சொல்
    அ) வரு ஆ) க இ) வா ஈ) வாருங்கள்
13. 'பாலாடை' .................. இச்சொல்லுக்குரிய புணர்ச்சி
    அ) தோன்றல் ஆ) திரிதல் இ) இயல்பு ஈ) கெடுதல்
14. ஓரெழுத்து ஒரு மொழிகளின் எண்ணிக்கை...............
    அ) 42 ஆ) 24 இ) 12 ஈ) 18
15. பின்னலாடை நகரம் என்று அழைக்கப்படும் நகரம்
    அ) திண்டுக்கல் ஆ) நாமக்கல் இ) ஈரோடு ஈ) திருப்பூர்

**பொருத்துக: ( ஊரும் - சிறப்பும் )**

16. காஞ்சிபுரம் - குட்டி ஜப்பான்
17. சேலம் - மஞ்சள் சந்தை
18. சிவகாசி - முத்து நகரம்
19. தூத்துகுடி - பட்டு
20. ஈரோடு - மாங்கனி நகரம்

**II. சுருக்கமாய் விடையளி.:- (எவையேனும் 4 வினாக்கள் மட்டும்)** 4x2 = 8

21. உலகம் எவற்றால் ஆனது?
22. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?
23. பழியின்றி வாழும் வழியாகத் திறக்குறள் கூறுவது யாது?
24. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

25. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

26. இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார்?

## III. எவையேனும் 5 வினாக்கள் மட்டும்.: (மொழிப்பயிற்சி திறன்) 5x2 = 10

27. கலைச்சொல் தருக.:- 1) Tribes 2) Loom

28. தமிழ் எண் உரு தருக.:- 1) 1947 2) ஆகஸ்ட் 15

29. சரியான மரபுச்சொல் எழுதுக.:- 1) சோறு 2) கோழி

30. சொற்றொடரில் அமைத்து எழுது.:- 1) பிறந்த நாள் 2) அழகுக்காக

31. சரியான இணைச்சொற்களை இட்டு நிரப்புக.:-

1) ஆற்று வெள்ளம்............ பாராமல் ஓடியது (எதிரிணை)

2) திருவிழாவில் யானை................. வந்தது (நேரிணை)

32. பின்வரும் சொற்களைக்கொண்டு புதியசொற்கள் உருவாக்கு

மா தேன் மலர் முட்டை குருவி இலை கூடு

33. பொருத்தமான பன்மை விகுதிகளை எழுதுக.

1) கல் 2) மரம் 3) பூ 4) வாழ்த்து

## IV. சிறுவினாக்கள் எவையேனும் 4 எழுதுக. 4x4 = 16

34. தமிழ்மொழியை வாழ்த்தி பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

35. நீர் நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.

36. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?

37. மூங்கிலால் உருவாக்கப்படும் பொருள்களை எழுதுக.

38. வேற்றுமை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

39. மழைச்சோற்று நோன்பு பற்றி விளக்குக.

## V. அடிமாறாமல் எழுதுக. 2+2+3+3+ = 10

40. தக்கார் எனத் தொடங்கும் குறள்

41. சொல் என முடியும் குறள்

42. கற்றோர்க்குக் கல்வி எனத் தொடங்கும் நீதிநெறிப்பாடல் எழுதுக.

43. 'வழிவர் சிலர்கடல் .......... இன்றியே' படை வேழம் பாடல்

## VI. நெடுவினா. 3x7 = 21

44. அ) ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை? ( அல்லது )

ஆ) நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.

45. அ) கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக. ( அல்லது )

ஆ) M.G.R ன் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.

46. அ) வெட்டுக்கிளியும் சருகுமானும் கதையை சுருக்கி எழுதுக. ( அல்லது )

ஆ) அறிவுசால் ஔவையார் கதையை சுருக்கி எழுதுக.

## VII. கடிதம் எழுதுக. 1x4 = 4

47. அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்கு பாராட்டுக் கடிதம் எழுதுக.

( அல்லது ) ஆ) இருப்பிடச்சான்று வேண்டி வட்டாட்சியருக்கு கடிதம் எழுதுக.

## VIII. பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக. 1x8 = 8

48. அ) நூலகம் - முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்திலுள்ளவை - படிக்கும்முறை - முடிவுரை ( அல்லது )

ஆ) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - முன்னுரை - நோய்வரக் காரணங்கள் - நோய் தீர்க்கும் வழிமுறைகள் - வருமுன் காத்தல் - உணவும் மருந்தும் - உடற்பயிற்சியின் தேவை - முடிவுரை

## XI. சிந்தனை வினா. 1x3 = 3

49. நாட்டுப்பற்றை வளர்க்கும் வகையில் விடுதலை நாளை எவ்வாறு கொண்டாடலாம்?